(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 7.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2010, மே 19, புதன்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0005/'10

1.

கௌரவ சஜித் பிரேமதாச,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(ஆ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் கமநல மத்திய நிலைய ஆளுகைப் பிரதேசங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஆளுகைப் பிரதேசங்கள் யாவை என்பதையும்,

(iii) கமநல மத்திய நிலையங்கள் மட்டத்தில் காணப்படும் குத்தகை விவசாயிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) குத்தகை விவசாயிகளின் முகவரிகளை உள்ளடக்கிய பெயர்ப்பட்டியலொன்றை கமநல மத்திய நிலையங்கள் மட்டத்தில் பெற்றுத் தருவதற்கு அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0011/'10

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) மஹிந்த சிந்தனை கொள்கையை நடைமுறைப்படுத்துவதன் கீழ் தாபிக்கப் பட்டுள்ள "மகநெகும" கருத்திட்டத்தின் கீழ் 2008 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை நிர்மாணிக்கப்பட்டுள்ள வீதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) அந்த ஒவ்வொரு வீதிக்காக மதிப்பீடு செய்யப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்,

(iii) அவ்வாறு மதிப்பீடு செய்யப்பட்ட தொகையில் இதுவரை செலவிடப் பட்டுள்ள தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இந்த திட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள நெடுஞ்சாலைகள், நிர்மாணிப்புகள் மற்றும் இயந்திர உபகரணங்கள் நிறுவனத்தின் கீழ் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) அந்த நிறுவனத்தின் கீழ் நாடு முழுவதிலும் திறக்கப்பட்டுள்ள அலுவல கங்களின் எண்ணிக்கை மற்றும் வாகன ஆவணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0006/'10

3\.

கௌரவ சஜித் பிரேமதாச,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(ஆ) (i) இலங்கையில் காணப்படும் கமநல மத்திய நிலைய ஆளுகைப் பிரதேசங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அவை யாவை என்பதையும்,

(iii) கமநல மத்திய நிலையங்கள் மட்டத்தில் உள்ள குத்தகை விவசாயிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) குத்தகை விவசாயிகளின் முகவரிகளை உள்ளடக்கிய பெயர்ப்பட்டியலொன்றை கமநல மத்திய நிலையங்கள் மட்டத்தில் பெற்றுத் தருவதற்கு அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0012/'10

4\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 1999 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரையிலான, வடமேல் மாகாண சபையின் கணக்கு அறிக்கைகளை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா ?

( ஆ) மேற்படி கணக்கு அறிக்கைகளின் மூலம் வெளிவந்த மோசடிகள் மற்றும் ஊழல்களுடன் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளப்பட்டதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

( இ) மேற்படி மோசடிகள் மற்றும் ஊழல்களுடன் சம்பந்தப்பட்ட உத்தியோகத் தர்களுக்கும் ஏனைய நபர்களுக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் சம்பந்தமான விரிவான அறிக்கையொன்றை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா ?

(ஈ) (i) ஒழுக்காற்று விசாரணையின் முடிவுகளுக்கேற்ப குற்றம்சாட்டப்பட்ட உத்தியோகத்தர்களை சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பதையும்,

(ii) இன்றேல், குற்றம் சாட்டப்பட்ட உத்தியோகத்தர்களை சேவையில் ஈடுபடுத்தியுள்ள அதிகாரிகளுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(உ) இன்றேல், ஏன் ?

0007/'10

5\.

கௌரவ சஜித் பிரேமதாச,- சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,-

(அ) கிரிந்த ஓயா கழி முகத்திலிருந்து தொர ஓயா கழி முகம் வரையுள்ள 396 ஏக்கர் பூராவும் பரந்துள்ள 04.05 கிலோ மீற்றர் நீளமும், 01.05 கிலோ மீற்றர் அகலமும், 30 மீற்றர் உயரமும் கொண்ட மாகம மணல் மேடு பற்றி அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த மணல் மேட்டின் காரணமாக 676 ஏக்கர் வயலும் 31 ஏக்கர் மேலதிக பயிர்ச்செய்கைக் காணியும் கடலலையிலிருந்து பாதுகாக்கப் படுகின்றதென்பதையும்,

(ii) இந்த மணல் மேடானது தென்னிலங்கைக்குரிய பாலை, வீர, பொன்னாவரசு, போன்ற தாவரங்களை உள்ளடக்கியுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(இ) (i) இந்த மணல் மேடானது, அதிலுள்ள இல்மனைட், கிரனைட் ஆகிய கனியங்களை பெற்றுக் கொள்வதற்காக வெளிநாட்டு நிறுவனமொன்றுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதையும்,

(ii) சுமார் எட்டு அடிக்கு கீழுள்ள இந்த கனியங்களை பெற்றுக்கொள்ளும் பொது நில மட்டத்திலிருந்து மேலுள்ள மணல் மேற்பரப்பில் 60 வீதம் வரை அகற்றப்படுவதால் மாகம மற்றும் அதனை அண்மித்த கிராமங்களுக்கு பாதிப்புகள் ஏற்படுமென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) (i) அவ்வாறெனின் அந்த பாதிப்புகளைத் தவிர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்னவென்பதையும்,

(ii) இந்த கருத்திட்டத்திற்காக பிரதேச மக்களின் விருப்பத்தைக் கேட்டறிவதை கருத்திட்டக் குழு மேற்கொண்டதா என்பதையும்,

(iii) மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் இந்தக் கருத்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருப்பின் அவ்வாறு செய்யப்பட்டது யாருடைய வழிகாட்டலின் கீழ் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0013 /'10

6.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) எமது நாட்டின் பெருந்தொகையான கடற்றொழிலாளர்கள் இந்திய அரசின் தடுப்புக்காவலில் உள்ளார்கள் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2009 சனவரி மாதம் முதல் இற்றைவரை இந்திய அரசாங்கத்தினால் கைது செய்யப்பட்ட கடற்றொழிலாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) தற்போது தடுப்புக்காவலில் உள்ள கடற்றொழிலாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) தடுப்புக்காவலிலுள்ள கடற்றொழிலாளர்களை விடுவிப்பதற்கு மேற்கொள் ளப்பட்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.05.04 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 4.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 4.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

2.

கௌரவ தயாசிரி ஜயசேகர,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக:—

"இலங்கை மத்திய கல்லூரிகளின் பழைய மாணவர் சங்கத்தைக்
கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

3.

கௌரவ ஜானக பண்டார,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக:—

"தொல்பொருட்கள் பாதுகாக்கும் ஒழுங்கமைப்பைக்
கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (மே 18, 2010),— "அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2009 செத்தெம்பர் மாதம் 30 ஆம் திகதிய 1621/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக". எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*2.

விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (மே 18, 2010),— "அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2009 நவெம்பர் மாதம் 09 ஆம் திகதிய 1627/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக". எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*3.

விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.3),— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (மே 18, 2010),— "அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட

வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2009 திசெம்பர் மாதம் 20 ஆம் திகதிய 1632/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக". எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*4.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,—உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள், — 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணிகள் மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம்,— நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளரின் (ஒம்புட்சுமன்) சம்பளம், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 156 (3) உறுப்புரையின் வண்ணம் 2009.01.01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு நடைமுறைக்கு வருமாறு அமைய வேண்டுமென இப் பாராளுமன்றத்தினால் இத்தால் குறித்துரைக்கப்படுகின்றது.

நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்சுமன்) - ரூ. 65,000 /=

மேலும், இந்த மாதாந்த சம்பளத்துள் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள வீட்டு வாடகைப் படியும் உள்ளடக்கப்பட்டுள்ளதாதலால், நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளருக்கு (ஓம்புட்சுமன்) வீட்டு வாடகைப் படியும் அடங்கலாக ரூ. 65,0000/= மாதாந்த சம்பளத்திற்குப் புறம்பாக, 2009.01.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிற படிககைப் பெறுவதற்கு உரிமை இல்லையெனவும் இந்தப் பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.